D I E T                                        "செய்தி மடல்"

NEWS LETTER

---

ஜனவரி 1996

---

# DISTRICT INSTITUTE OF EDUCATION AND TRAINING,

## NAMAKKAL, SALEM DISTRICT.

***

பள்ளிக் கல்வியிலே பயில வருகிறார்க்கு
தெள்ளத் தெளிந்த தமிழ் மற்றும் கணிதம்
சுற்றுப் புறச்சூழல் நல்லொழுக்க வகைகளையும்
கற்கும் வகைதெரிய கற்பிக்கப் பயிற்றும்
பல்துறை வல்லுநர் நிறைந்த
பாங்கான நாமக்கல் பயிற்சி நிறுவனமே.

---

மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிறுவனம்,
நாமக்கல் - 637 001.
சேலம் மாவட்டம்.

"செய்தி மடல்" ஜனவரி 1996.

மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிறுவனம்,

நாமக்கல், சேலம் மாவட்டம்.

## பொருளடக்கம்.


1. முதல்வர் திருமதி. எஸ். முத்துலட்சுமி அவர்களின் அணிந்துரை.

2. பெருக்கல் வாய்ப்பாட்டை விளையாட்டு முறையில் அமைத்தல்.
   கவர்க்கத்தின் கனமூலம்.
   திரு. சி. பெரியசாமி, எம்.எஸ்ஸி., எம்.எட்.,
   விரிவுரையாளர்.

3. தொடக்கக் கல்வியில் மதிப்பீடு
   திரு. என். நரசிம்மன், எம்.ஏ., எம்.எட்.,
   முதுநிலை விரிவுரையாளர், பிரிவு-7.

4. துவக்கப்பள்ளிகளில் பணி அனுபவப் பிரிவின் பங்கு
   திரு. D. குணசேகரன்,
   முதுநிலை விரிவுரையாளர்,

5. Impediments of Women's Education and Suggestions
   திரு. K. வெங்கட்ராமன், எம்.காம்., எம்.எட்.,
   விரிவுரையாளர்,

6. Report from Educational Technology Branch
   திரு. J. சார்லஸ் வில்லியம், எம்.எஸ்ஸி., எம்.எட்.,
   முதுநிலை விரிவுரையாளர்.

7. அனைவருக்கும் கல்வி
   திரு. வி. உமாபதி,
   முதுநிலை விரிவுரையாளர்.

8. மாவட்டக் கருவூலம்
   திரு. K. கந்தசாமி,
   முதுநிலை விரிவுரையாளர்.

9. நாமும் தெரிந்துகொள்வோமே!
   திரு. C. செல்வராஜு,
   விரிவுரையாளர்.

10. பணியிடை பயிற்சிகள் 1994-95.

11. மேற்கொள்ள திட்டமிட்ட பணியிடைப் பயிற்சிகள் 1995-96.

12. உங்களுக்குத் தெரியுமா?
    திரு. . வெங்கட்ராமன்,
    விரிவுரையாளர்.

## முதல்வர் அவர்களின் கருத்துக்கள்
(திருமதி.எஸ்.முத்துலட்சுமி, எம்.ஏ.,எம்.எட்.,)

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" உலகில் பிறந்த மனிதர் ஒவ்வொருவருக்கும் கல்வி இன்றியமையாதது. கல்வியினால் கிடைக்கும் அறிவு அறம் காக்கும் கருவி. அறிவும் ஆற்றலும் நிரம்பிய குடிமக்களை உருவாக்கும் "அனைவருக்கும் கல்வி" என்ற அரசின் உயரிய நோக்கத்தை செயல்படுத்தும் மாவட்ட கல்வி ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஆசிரியர்களின் பணி--மேம்பாட்டிற்கும், ஆரம்பக்கல்வியின் தரத்தை உயர்த்தவும் தொடர் கல்விப்--பணியில் ஈடுபட்டு மகளிர், தாழ்த்தப்பட்டோர், உடல் ஊனமுற்றோர், மலைவாழ்-மக்கள் ஆகியோரின் கல்வி வளர்ச்சிக்கு உதவக்கூடிய திட்டங்களில் பங்கேற்கவும் செய்கிறது.

ஒரு நாட்டினுடைய தலைவிதி வகுப்பறைகளில்தான் நிர்ணயிக்கப்படுகிறது. எனவே, வகுப்பறையில் கற்பிக்கும் ஆசிரியர்களின் கடமை பள்ளியில் பயிலும் குழந்தைகள் அனைவருக்கும் முழுமையான கல்வியைக் கொடுத்தும் அக்கல்வியின் பயனாக அக்குழந்தைகள் முழு ஆளுமைத் தன்மைகளை பெற்றிட வழிவகுக்கச்-செய்வதாக இருக்கவேண்டும். பள்ளியில் சேரும் எல்லாக்குழந்தைகளும் பள்ளியைவிட்டு நின்றுவிடாமல் இருக்க ஆசிரியரின் கற்பித்தல் கவர்ச்சிகரமாக புதிய அணுகுமுறை--களுடனும், செயல்திட்டங்களுடனும் அமையவேண்டும். அத்தகைய பயிற்சியினை ஆசிரியர்களுக்கு வழங்கி அவர்களை கலைபயில்தெளிவும் கட்டுரை வன்மையும் உடையவர்களாகச் செய்ய பல்வேறு பணியிடைப்பயிற்சிகளை கொடுத்துவருகிறது மாவட்டக் கல்வி ஆசிரியர் பயிற்சி நிறுவனம்.

இந்நிறுவனத்திலிருந்து 'செய்திமலர்' வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். இம்மலர் இந்நிறுவனத்தின் முதுகலை விரிவுரையாளர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் சிந்தனைகளையும், கட்டுரைகளையும் தாங்கி வருகிறது. மலர் பற்றிய படிப்போரின் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

"நெஞ்சத்து நல்லம் யாம் என்னும் நடுவுநிலைமையால்
கல்வி அழகே அழகு"

-- நாலடியார்.

எஸ். முத்துலட்சுமி
முதல்வர்.


# பெருக்கல் வாய்ப்பாட்டை விளையாட்டு முறையில் அமைத்தல்

சி. பெரியசாமி, [illegible]
எம்.எஸ்.சி.,எம்.எட்.,
விரிவுரையாளர் (கணிதம்),
பணிமுன் பிரிவு.

தொடக்க நிலை மாணவர்களுக்கு பெருக்கல் வாய்ப்பாட்டை கற்றுத்தரும்-பொழுது கரும்பலகையில் எழுதிப்போட்டு மனப்பாடம் செய்யக்கூடாது. செயல் அடிப்படையின் மூலம் விதைகள் அல்லது குச்சிகள் கொண்டு மாணவர்களே அமைக்க-வேண்டும் என வலியுறுத்துகிறோம். அவ்வாறு வாய்ப்பாடுகள் அமைத்தபின் தேப்பியர் அட்டைகள் மூலம் பயிற்சி அளிக்கவேண்டும். என்ற முறையினை நாம் பின்பற்றுகிறோம் அல்லவா!

தற்பொழுது துணைக்கருவிகள் ஏதும் இல்லாமல் பெருக்கல் வாய்ப்பாட்டினை விளையாட்டு முறையில் மாணவர்களே அமைக்கலாம் என்பதை பார்ப்போம்.

உதாரணமாக மாணவர்களுக்கு மூன்றாம் வாய்ப்பாடு அமைக்கும் விதத்தை கற்பிக்க மாணவர்களை கீழ்க்கண்டவாறு 10 வரிசையில் 3 வட்டங்களை போடச்செய்து அதில் 1,2,3,.....30 வரை எழுதச்செய்யவேண்டும். கடைசிக் கட்டத்தில் வரும் எண்கள் மூன்றாம் வாய்ப்பாடு ஆகும்.




மேற்கண்ட முறையில் அனைத்து வாய்ப்பாடுகளையும் அமைக்கமுடியும். இம்முறையில் அமைப்பதால் மாணவர்கள் பொருளுணர்ந்து கற்க வாய்ப்பு ஏற்படும். வகுப்பறையில் இம்முறை ஒரு நல்ல பலனை ஏற்படுத்தும்.

# கனவர்க்கத்தின் கன மூலம் காணும் வழி

சி. பெரியசாமி,
எம்.எஸ்.சி., எம்.எட்.,
விரிவுரையாளர் (கணிதம்),
பணியிடைப் பிரிவு.

கீழ்க்கண்ட அட்டவணையைக் கவனியுங்கள்.

| கனமூல எண் | கனவர்க்க எண் |
|---|---|
| 1 | 1 |
| 2 | 8 |
| 3 | 27 |
| 4 | 64 |
| 5 | 125 |
| 6 | 216 |
| 7 | 343 |
| 8 | 512 |
| 9 | 729 |
| 10 | 1000 |

இந்த எண்களைக் கவனியுங்கள். இடது கைப்பக்கம் கொடுத்துள்ள எண்களின் கனவர்க்க எண்கள் அல்லது மூன்றடுக்குகள் வலது கைப்பக்கம் எதிரெதிரே கொடுக்கப்பட்டிருக்கின்றன. 2-ன் மூன்றடுக்கு 8-லும், 8-ன் மூன்றடுக்கு 2-லும் ஆக முடிந்திருக்கின்றன. அதுபோலவே 3-ன் மூன்றடுக்கு 7-லும், 7-ன் மூன்றடுக்கு 3-லும் முடிந்துள்ளன. 1000 ஆனது 10-ஐப்போல் சைபரில் முடிந்துள்ளது. இதுதான் முதலாவதாக தெரிந்துகொள்ளவேண்டிய விஷயம்.

ஓர் இலக்க எண்ணின் மூன்றடுக்கு 1 முதல் 3 இலக்கங்கள் வரையும் இருக்கலாம். இரு இலக்க எண்ணின் மூன்றடுக்கில் 4 முதல் 6 இலக்கங்கள் இருக்கும். இவ்வாறு இலக்கங்கள் கூடக்கூட மூன்றடுக்கில் மும்மூன்று இலக்கங்கள் வரை கூடிக்கொண்டு போகும்.

சாதாரணமாக அனைவராலும் 6 இலக்கங்கள் வரையுள்ள எந்த கனவர்க்க எண்ணுக்கும் கன மூலத்தை உடனே சொல்லிவிடலாம்.

531441-ன் கன மூலம் பின்வருமாறு காணலாம். இது 1-ல் முடிந்திருப்- -பதால் கன மூலமும் 1-ல்தான் முடிவடையும். (மேலே உள்ளவற்றை பார்க்க). இங்கே 6 இலக்கங்கள் இருப்பதால் கன மூலத்தில் இரண்டு இலக்கங்கள் இருக்கும். அதில் ஒரு இலக்கம் 1-ஐ கண்டுபிடித்துவிட்டோம். ஆகையால் கடைசி மூன்று இலக்கங்களை இனி விட்டுவிடலாம். மீதி இருப்பது 531. எந்த எண்ணின் மூன்றடுக்கு இதையடுத்து வருகிறது என்பதை கவனியுங்கள். 9-ன் மூன்றடுக்கு 531-க்கு அதிகமாக இருப்பதால் 9-ஐ எடுத்துக்கொள்ளமுடியாது. 8-ன் மூன்றடுக்கு 512. இது 531-ல் அடங்கிய எண்தான். எனவே கன மூலம் 81 ஆகும்.

# "தொடக்கக் கல்வியில் மதிப்பீடு"

என், நரசிம்மன்,
முதுநிலை விரிவுரையாளர் (பிரிவு-7).

"புதிய கற்றல் கற்பித்தல் அணுகுமுறை"யில் கற்றல் இலக்குகள் வரையறுக்கப்பட்டன. ஒவ்வொரு வகுப்பிலும் தமிழ், கணிதம், சூழ்நிலையியல் (அறிவியல், சமூகவியல்) ஆகியவற்றில் சீரான, படிப்படியான இலக்குகளின் அடைவு பாடத்திட்டத்தில் அமையப் பெற்றது. முதல் வகுப்பின் ஆரம்ப காலக்-கட்டத்தில் மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் அச்சத்தை நீக்கவும், கற்றலுக்கு ஆயத்தநிலை முதல் 6 வாரங்களுக்கு பயிற்றுவிக்கப்படுகிறது. இம்மாதிரியான பயிற்சி, ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிலைய விரிவுரையாளர்களுக்கு அளிக்கப்பட்டது.

"தமிழ்" மொழிப் பாடத்தில் ஒவ்வொரு வகுப்பிலும் '19' திறன்கள் மட்டுமே உள்ளன. கணிதப் பாடத்தில் 1, 2, 3, 4, 5 வகுப்புகளில் முறையே 24, 22, 48, 60, 53 திறன்கள் வரையறுக்கப்பட்டன. சுற்றுச்சூழ்நிலையியல் பாடத்தில் 1, 2, 3, 4 மற்றும் 5ஆம் வகுப்புகளில் முறையே 15, 20, 45, 52, 45 திறன்கள் வரையறுக்கப்பட்டன.

புலன் சார்ந்த கல்வியான ( Cognitive ) தமிழ், கணிதம், சூழ்நிலையியல் ஒவ்வொரு நிலையிலும் தேர்வு நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு திறனுக்கும் ஒரு மதிப்பீடு வழங்கப்படுகிறது. மதிப்பெண் சமமதிப்பீடு வழங்கப்படுகிறது. மேலும் குறைந்தபட்சக் கற்றல் இலக்கு மதிப்பீடு அட்டவணையில் குறிப்பிட்ட திறனில் அடைவு பெறாவிடில் அதனை 'கடினபகுதி' ( Hard spot ) என கருதப்படும். அதற்கு புதியமுறை பயிற்சி முறையை புகுத்தியும் அல்லது பாடக்கருவிப் பெட்டிகளின் கருவிகளையும் பயன்படுத்தியும் சிறுவர்களுக்கு அத்திறனில் முழு அடைவினைக் காணச்-செய்யலாம். ஒவ்வொரு தேர்வில் வரையறுக்கப்பட்ட திறனிலும் 80% விழுக்காடு அடைவுபெற வேண்டும் என்பது குறைந்தபட்சக் கற்றல் இலக்கின் சாதனையாகும். இது வரவேற்கும் திட்டமாகும். இதன் மூலம் ஆசிரியரின் கற்பித்தலை மதிப்பீடு செய்யவும் வழிவகுக்கும் பழைய முறையில் இருந்த மதிப்பீட்டு விழுக்காடு 35. தற்போது 80% ஆக உயர்த்தப்பட்டது. இம்முறை தொடர்ச்சியான, விரிவான மதிப்பீட்டு முறையாகும்.

புலன்சாராக் கல்வி ( Non cognitive subjects ) பகுதியில் உடற்கல்வி, உடல்நலக் கல்வி, வாழ்க்கைக் கல்வி, கலைக்கல்வி, நன்னெறிக் கல்வி ஆகியவை அடங்கும்.

புலன் சார்ந்த கல்வியில் ஒவ்வொரு திறனும் முழு அடைவினை பெற '3' குறிப்புகள் இருப்பின் '2' குறிப்புகள் மட்டுமே சரியாக இருப்பின் பூரண மதிப்பீடு இல்லை. முதல் 'இரு' வகுப்புகளுக்கு 'வாய்மொழி' தேர்வு நடத்த வழி கோருகிறது. இதனால் பொருளாதார சிக்கலும் ஆசிரியரின் வேலைப்பளுவும் குறைக்கிறது.

.2.

நன்னெறிக்கல்வியில் ஒழுங்கு கட்டுப்பாடு, கீழ்ப்படிதல், மரியாதை செய்தல், நேர்மை பேணுதல், பொருள்களைப்பாதுகாத்தல், அன்பு காட்டுதல், சேமிப்பு உணர்வு, உண்மை பேசுதல், கடவுள் பக்தி, என்பன அடங்கும். இதனை ஒட்டிய மதிப்பீட்டில் மிக நன்று, நன்று, சுமார் என்ற நிலை குறிக்கப்படுகிறது. வாழ்க்கை கல்வியும் கலைக்கல்வியும், உடல் நலக்கல்வியும் இவ்வாறே மதிப்பீடு செய்யப்படுகிறது. உடற்கல்வி பகுதியில் '5' நிலைகளாக மதிப்பீடு செய்யப்--படுகின்றன.

இம்மதிப்பீடுகள் கற்றலின் செயலின் அடிப்படையிலும் உற்றுநோக்குதலின் மூலமும் அளவீடு செய்யப்படுவதால் சிறார்களுக்கு மனநிறைவு ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

Mr.K.Venkatraman, Lecturer and Miss.S.Agnes, Work Experience Teacher had participated in the seminar "Early Child care and Education" during the month of March'95 at DIET,Wellingdon, Madras.

Mr.V.Umapathy, Mr.M.Kannaiyan a-nd Mr.J.Charles William, Senior Lecturers had participated in the seminar 'UPE' during the month of May'95 at DIET, Kothagiri.

# துவக்கப்பள்ளிகளில் பணி அனுபவப்பிரிவின் பங்கு.

க. குணசேகரன்,
முதுநிலை விரிவுரையாளர்,
பணி அனுபவ பிரிவு.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பர் முந்தோர். பிஞ்சு உள்ளங்களில் இடப்படும் உள்ளீடு ( inputs ) ஆழப்பதிந்து சிறந்த வெளிப்பாடாக அமையும் என்பதில் ஐயமில்லை. அத்தகு உள்ளீடு ஒரு நல்ல பயிற்சியாக, பணி அனுபவச் செயல்பாடாக அமையுமாயின் அதுவே சிறந்த மூலதனமாகும். இந்நிலையில் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கும், உயர் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கும் பணி அனுபவப் பயிற்சி தரப்படின் நல்ல விளைவுகளை மாணவரிடையே ஏற்படுத்தலாம். இத்தகு பயிற்சிகள், தொழில் செய்யவேண்டும், என்ற எண்ணத்தையும் தொழில் தனித்திறமை பெறவேண்டும் என்ற தனி முனைப்பையும் ஏற்படுத்தும். மேலும் உழைப்பை மதிக்கும் மனப்பான்மையையும், உழைப்பாளியை மதிக்கும் பெரு நோக்கும் கொண்ட மனிதர்களாகவும் உயர்த்த பிஞ்சு உள்ளங்கள் பக்குவப்படுத்தப்படும்.

பல பலனுள்ள, பண்புள்ள, [illegible] தற்சார்புள்ள முழு மனிதனாக மாறி எதிர்காலத்தை வளமடையச் செய்யவும், எதிர் வரும் சவால்களை எதிர்கொள்ளும் மன உறுதியையும் வளர்க்கும் வகையிலான பணி அனுபவங்களை வயதிற்கேற்றவாறு அளிக்கப்படவேண்டும். இத்தகு சீரிய முயற்சியில் இம்மாவட்ட கல்வி பயிற்சி நிறுவன பணி அனுபவ பிரிவு தனது செயல்பாடுகளை முடுக்கிவிட்டுள்ளது.

மேற்காணும் நோக்கத்தினை செயல்படுத்தும் கட்டமாக ஆசிரியப்பயிற்சி மாணவர்களுக்கும், பணியிடை பயிற்சி பெறவரும் ஆசிரியர்களுக்கும், சமுதாய தலைவர்களுக்கும், கற்கும் சிறார்களுக்கும் கற்பிக்கத்தக்க வகையில்
(1) சொட்டு நீலம் (2) சலவைத்தூள் (3) பாத்திரம் துலக்கும் தூள்
(4) அலங்காரக் கலை (5) ஒட்டுதல் வேலை (6) பின்னல் வேலைகள்
(7) கம்பளி ஆடைகள் செய்தல் (8) மண், ஓட்டிலிருந்து பொருள் தயாரித்தல்
(9) காய்கறித்தோட்டம் அமைத்தல் (10) பயன்தரும் பொழுதுபோக்கில் ஈடுபடல்
ஆகிய வருவாய் ஈட்டத்தக்க வழிமுறைகளை பணி அனுபவப்பிரிவு கற்றுத்தருகிறது.

துவக்கப்பள்ளிகளில் காகிதத்தை மடித்து உருவங்கள் செய்தல், பஞ்சினால் உருவங்கள் செய்தல், வண்ண மை கொண்டு வெள்ளைத்தாளில் உண்டாக்கப்படும் இணைப்படங்கள் மூலம் மாணவரின் மனவளர்ச்சியைத் தூண்டுதல், கதை, பாட்டு மூலம் மொழிவளத்தைப் பெருக்குதல், நடித்தல், நடனம் மூலம் தனித்திறன் வளர்த்தல் ஆகிய செயல்பாடுகளின் வழியே பணி சார்ந்த அனுபவங்களை மாணவர்களுக்கு ஊட்டலாம்.

உயர் துவக்கப்பள்ளிகளில், வீணாகக் கருதப்பட்ட நார், முட்டை ஓடு, தேங்காய் ஓடு, உறிஞ்சு குழல், கோழி இறகு போன்ற பொருட்களைக் கொண்டு விலைமதிப்புள்ள பொருட்களாக செய்யக் கற்றுத் தரலாம். களிமண் வேலைகள், ஒயர் வேலைகள், உல்லன் நூல் ஆடைகள், தையல் வேலை செய்தல், இசைக் கருவிகள் இசைத்தல் ஆகியவை மூலம் தற்சார்புள்ள தன்மையை வளர்க்கலாம்.

மனித வளத்தைப் பெருக்குவதில் முக்கிய அங்கம் வகிக்கும் பணி அனுபவக்-கல்வியினைப் பல்வேறு நிலைகளில் வடிவமைத்த துவக்கப்பள்ளி மாணவரிடையே சிறந்ததொரு சுயத்த நிலையை உருவாக்குவதில் இப்பணி அனுபவப் பிரிவு செயலாற்றி வருகிறது.

Mr.N.Narasimhan, Mr.J.Charles William, Senior Lecturers, Mr.S.Sivaprakasam and Mr.C.Periasamy had participated in the meeting ~~xx~~ of New syllabus at "Tamilnadu Text book Corporation" at Madras in the month of May'95

Mr.D.Ramachandran, Lecturer had participated in the Seminar "Resource Mobilisation on NPE" during the month of May'95 at PTA building in Madras.

## IMPEDIMENTS OF WOMEN EDUCATION & SUGGESTIONS:

Mr. K.VENKATARAMAN,
Lecturer,
CMDE Branch.

Education is a basic human right and an essential tool for achieving the goals of equality, development and peace. Non-discriminatory education benefits both girls and boys. In this context literacy of woman is an important Key to improving health, nutrition and decision making in society. Giving education to women both in formal and non-formal side will lead a sustainable development and economic growth.

In central Asia and in some parts of Africa where access to education facilities are still in adequate. Approximately 100 million children including atleast 60 million girls are without access to Primary schooling, and more than 2/3 (Two thirds) of the world's. 960 million illiterate adults are women. The high rate of illiteracy is prevailing in most developing countries.

Discrimination in women education persists in many areas owing to customary attitudes, early marriages, inadequate educational materials, early drop-out from the educational system etc. The curriculum and teachning materials remain. Gender biased to a large degree. They are rarely sensitive to the specific needs of girls, and women. Science Text Books do not relate to women's daily experience and, girls are often deprived of basic education in Mathematics and Science. Last but not least, the Resources allocated to education in many countries are insufficient 2 sometimes further diminished. This has a long term adverse effect on human development particularly the women.

SUGGESTIONS FOR THE IMPEDIMENTS:

1. By the year 2000, A.D universal access to basic education without gender biased.

2. Easy access to all areas of ~~Tentory Ed~~ Education by ensuring that women have equal access to career development, Training, scholarship and by adopting positive action.

3. Attain the goals of equal access to education without distinction as to sex, race, age, national origin, religion or disability etc.
4. Increase enrolment and retention rates of women by allocating approximate budgetary resources and by enlisting the support of parents and the community through compaigns, flexible, school schedules etc.
5. Encouraging adult and family engagement in learning to promote total literacy for all people.
6. Improve women's access to vocational training Science and technology and continuing education.
7. Last but not least the Government, Quasi Governments and non-formal organisations should promote lifelong learning for women and monitoring them also.

So by all those activities and actions the women education will improve the status empowerment and productivity of a Nation.

---

Miss.S.Agness, Work Experience Teacher had participated in the seminar "Workshop on Creative activities" at DIET, Wellingdon, Madras during the month of June'95.

Mr.K.Venkatraman, Lecturer had participated in the seminar "Early child care and Education" during the month of September'95 at Gandhi Gram Institute, Madurai.

# EDUCATIONAL TECHNOLOGY BRANCH - A REPORT

Educational Technology being a main supporter of P.S.T.E. and all inservice Teacher Education programmes the E.T. Branch continuous its good work through recording of video and Audio programmes over the DD and Radio and its workshop sessions and awareness programmes.

Educational Technology branch realises fully well that, of the various technological equipments available for education, the primary schools possess only the two-in-one and hence resolves to make full use of it in primary education. It also seeks to train the teachers in the preparation and use low-cost and no-cost teaching aids.

The branch has submitted a list of suggested teaching aids to be used in the teaching of Std.-I texts to the DTERT. It prepared an audio cassette,(in collaboration with other faculty members) Tamil Rhymes and stories that could be used in teaching Standard-I and school readiness programmes, and supplied the same for the training of teachers in teaching MLL based text book for Standard-I. It also conducted a workshop to PSTE students on paper cutting. The branch supports all inservice education and PSTE programmes with Audio and video support materials. It has helped teachers in the preparation and use of low-cost and no-cost teaching aids through the various inservice programmes. And it has given other E.T. inputs like handling of A.V. equipments, preparation of OHP slides and improvisation of teaching aids and exposure to modern trends in educational technology.

The faculty head attended a three day training programme on UPE at ~~Krishnagiri~~ Kothagiri along with other faculty members held from 03.05.'95 to 05.05.'95 for three days and as a sequal to it, acted as a master trainer at the II level training programme conducted in the DIET, Namakkal from 21.08.'95 to 25.08.'95 for five days.

Along with three other faculty members the branch head participated in three day orientation programme for master trainers on teaching of MLL based text books for Standard-I from 10.05-'95 to 12.05.'95 for three days at the DTERT, Madras and as a follow-on acted as master trainer for the same, to AEO's and the DIET faculty and the DIET, Namakkal from 15.05.'95 to 19.05.'95.

By way of extension service the branch head acted as resource person for AIDS awareness programmes held in the local schools. On 14.10.'95 gave an environmental awareness talk and video programme at Mareppanaickanpatti, Namakkal.

From 01.12.'95 to 10.12.'95 the branch head participated in the 10 days workshop on 'Environmental Orientation to School Education organised by the NCERT at RIE, Mysore in which Kerala, Andra Pradesh, Karnadaka and Tamil Nadu and Pondicherry Union participated.

As was done last year, with the help of the Work Experience faculty member Mrs. Aghnes Simon, a play for Arivozhi Iyakkam, 'Uli Eatruvom' by tittle, was recorded on 18.11.'95 at AIR, Trichy and broadcast on 20.11.'95.

The ET also lends its audio cassette to Primary school teachers for copying.

The following are the new acquisitions for its Audio/Video library.

**VIDEO PROGRAMMES:**

| | | |
|---|---|---|
| 1. Six killer diseases | : | 1 |
| 2. Arivozhi Iyakka learning centre activities. | : | 1 |
| 3. Programmes related to Primary education. | : | 2 |
| 4. Programme on paper cutting puppets etc. | : | 1 |

**AUDIO PROGRAMMES:**

| | | |
|---|---|---|
| 1. AIDS awareness song | : | 2 |
| 2. AIDS awareness (Question & Answers) | : | 1 |
| 3. Arivozhi padalgal | : | 1 |
| 4. Tamil Rhymes & Stories. | : | 1 |

Besides its special functions the ET branch also does other routine works ~~like~~ like school visit, SOPT training programmes. MLL training programmes, hands on experience for DIET faculty in handling VCR, TV, Two-in-Ones, computer, OHP and Slide Projectors.

The ET Branch prepared a Tamil Audio track for the Video cassette supplied by DTERT on UPE with the help of DIET faculty and students of PSTE.

The ET branch also contributed its mite to AE/NFE and EVSS by acting as Key Resource person.

The ET Branch will continue to strive for the Betterment of Primary Education, both formal and non-formal and Adult Education in the district through its input into PSTE and inservice Teacher Education programmes.

Mr. J.CHARLES WILLIAM,
SENIOR LECTURER,
EDUCATION TECHNOLOGY
BRANCH.

# அனைவருக்கும் கல்வி

வி. உமாபதி,
முதுநிலை விரிவுரையாளர்,
பணியிடைப்பயிற்சி பிரிவு.

6 முதல் 14 வயதிற்கு உட்பட்ட அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி வழங்கல் இந்திய அரசியல் சட்ட 45-வது ஷரத்து வலியுறுத்துகிறது. விடுதலைப்பெற்ற 48 ஆண்டுகள் கடந்தும், சுமார் 28.4 கோடி மக்கள் கல்லாமை என்னும் இருளில் மூழ்கியுள்ளனர். கி.பி.2000-க்குள் அனைவரும் கல்வியறிவு பெறுவதே நடுவண் அரசின் குறிக்கோளாகும்.

1986-ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசியக் கல்விக் கொள்கை பாரபட்சமற்ற தரமான கல்வி வழங்க திட்டம் தீட்டியது. அதன் அடிப்படையில் 1988-ல் மாவட்டம் தோறும் மாவட்டக் கல்வி மற்றும் ஆசிரியப் பயிற்சி நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டன. பள்ளிக் கல்வியிலும், பள்ளிசாராக் கல்வியிலும் திறன் அடிப்படையில் கல்வி கற்பிக்கப்படவேண்டும். தரம், உயர்தரம், நிரந்தரம் என்னும் லட்சியத்தை அடைய செயல் அடிப்படையில் ஆர்வத்தைத் தூண்டும் போதனா முறையே சிறந்தது. அதுவே குறைந்தபட்சக் கற்றல் இலக்கை அடைய உதவும்.

19.12.88ல் நாமக்கல்லில் ஆரம்பிக்கப்பட்ட சேலம் மாவட்டக் கல்வி ஆசிரியப் பயிற்சி நிறுவனம் பணிமுன் பயிற்சி, பணியிடைப் பயிற்சி மட்டுமல்லாமல் திறந்தவெளிக் கல்வி பயிற்சி, அறிவொளி இயக்கம், தொழில் கல்வி ஆசிரியர்களுக்கு பயிற்சி ஆசிரியர்களுக்கு புத்தறிவு பயிற்சி ( SOPT ) குறைந்தபட்சக் கற்றல் இலக்கு பயிற்சி ஆகியவற்றில் தரமான முத்திரையை பதித்து வருகிறது. இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் இந்நிறுவனம் அனைவருக்கும் கல்வி என்னும் வேள்வியில் முழு மூச்சுடன் இறங்கியுள்ளது.

## "சேலம் மாவட்டக் கல்வி ஆசிரியப் பயிற்சி நிறுவனமும் அனைவருக்கும் கல்வியும்"

**முதல்கட்டம்:**

முதல் கட்டமாக மே 1995-இல் இந்நிறுவனத்தைச் சார்ந்த 1) வி.உமாபதி 2) திரு. கண்ணையன் 3) திரு. சார்லஸ் வில்லியம் ஆகிய மூவர் முதுநிலை விரிவுரையாளர்களும் கோத்தகிரியில் "அனைவருக்கும் கல்வி" பயிற்சியில் கருத்தாளர்களாக பயிற்சி பெற்றனர்.

**இரண்டாம் கட்டம்:**

1995, ஆகஸ்ட் 21 முதல் 25ம் தேதி வரை சேலம் மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும் "அனைவருக்கும் கல்வி" பயிற்சி வழங்கப்பட்டது.

<u>மூன்றாம் கட்டம்:</u>

தொடக்கக் கல்வி அலுவலர்கள் மாவட்டத்தின் ஆசிரியர்களுக்கு "அனைவருக்கும் கல்வி" பயிற்சி வழங்க உள்ளனர்.

"<u>அனைவருக்கும் கல்வி" வெற்றிக்கு வழி</u>

1. 6-11 வயதுக்குட்பட்டவர்களை பள்ளிக் கல்வியில் சேர்த்தல்
2. இடையில் நின்ற 14 வயதுக்குட்பட்டவர்களை 100 விழுக்காடு முறைசாராக்-கல்வியில் சேர்த்தல்.
3. 5 வகுப்புகளிலும் 100 விழுக்காடு தொடர்ந்து படித்தல்.
4. எஸ்.சி / எஸ்.டி. / எம்.பி.சி / மற்றும் எல்லா பிரிவும் பெண் குழந்தைகளை விலகாது படிக்கச்செய்தல்.
5. வகுப்பிற்கு ஒர் ஆசிரியர் நியமனம்.
6. 5 ஆண்டுகளில் 5 வகுப்புகளை முடித்தல்.
7. அனைத்து ஆசிரியர்களுக்கும் பணியிடைப்பயிற்சி வழங்குதல்.
8. எம்.எல்.எல். பயிற்சி வழங்குதல்.
9. புலன்சாரா உணர்வுகளை வளர்த்தல்.
10. கி.பி.2000-க்குள் 14-வயதுக்குட்பட்டவர்கள் பள்ளிக்கல்வியில் அல்லது பள்ளிசாராக் கல்வியில் 5 வகுப்புகளுக்கான கல்வியைப் பெறுதல்.

Mr.S.Sivaprakasam, Iecturer had participated in the meeting of "preparation of Materials in ET" during the month of may'95 at DPI Campus, Madras.

கெ.கந்தசாமி,
முதுநிலை விரிவுரையாளர்,
மாவட்ட கருவூல அலகு.

நாமக்கல் மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன மாவட்டக் கல்விக் கருவூல முதுநிலை விரிவுரையாளர் சேலத்தில் 20.12.95 மற்றும் 21.12.95ல் ஆற்றல் மேம்பாடு ஆற்றல் உணர்தல் மூலம் மகளிர் பாதுகாப்பு பற்றிய கருத்தரங்கில் கலந்துகொண்டார்.

எழுத்தறிவுக்குப் பின்னான தொடர்கல்வி தருதல் பற்றியும் விவாதிக்கப்பட்டது. ஓமலூர் ஒன்றியம் முன்னோடி ஒன்றியமாகத் தேர்ந்தெடுத்து பயிற்சி தர திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

27.1.95 மற்றும் 28.1.95ம் தேதிகளில் மாநில பள்ளிசாராக் கல்விக்-கருவூலம் சார்பில் நடத்தப்பட்ட பயிற்சியில் இந்நிறுவன மாவட்டக் கருவூலப் பிரிவு முதுநிலை விரிவுரையாளர் கலந்துகொண்டார்.

இவ்வாண்டு முதல் பள்ளிசாராக் கல்வி தொடர் கல்வித் தொண்டர்களுக்கும் ஊக்குநர்களுக்கும் மாவட்டக் கல்விக் கருவூலமே பயிற்சி தரவேண்டும். தொடர்ந்த நடைமுறைகளைக் கண்காணிக்கவும் கற்றல் கற்பித்தலை ஆய்வு செய்யவும் ( Evaluation ) நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டது.

Mr.S.Sivaprakasam, Mr.C.periasamy and Mr.C.Selvaraju, Lecturers had participa-ted in the "State level Special Orientation Programme Training" during the month of November'95 at Tamilnadu Text Book Corporation, Madras.

## நாமும் தெரிந்துகொள்வோமா

சி. செல்வராஜ்,
விரிவுரையாளர்,
பணிமனை பிரிவு.

1. ஒளி சூரியனிடமிருந்து பூமியை வந்து சேர ஆகும் காலம்

   - 8.3 நிமிடம்.

2. சூரியன் இயங்கிக்கொண்டு இருக்கும் வேகம் வினாடிக்கு

   - 220 கி.மீ.

3. இரவு நேரங்களில் வானில் ஒளிக்கோடுகள் தோன்றி மறைவது

   - விண் எரிகற்கள்.

4. பூமியில் இருந்து சூரியன் உள்ள தூரம்

   - சுமார் 9 கோடியே 36 லட்சம் மைல்கள்.

5. வெற்றிடத்தில் ஒளி பரவுமா?

   - பரவாது.

6. வண்ணத் தொலைக் காட்சிப்பெட்டியைக் கண்டுபிடித்தவர் மற்றும் ஆண்டு

   - ஜான் லாகி பெயர்டு, 1939.

7. மருதாணியைக் கையில் தடவினால் சிவக்கக் காரணம் தெரியுமா?

   - லாசோனி என்ற நிறமிகள்.

8. ஒட்டகத்தின் முதுகெலும்பு கோணமாக இருக்குமா, நேராக இருக்குமா?

   - நேராக இருக்கும்.

9. யானையின் மேல் தாடையும் மூக்கும் இணைந்தது.

   - தும்பிக்கை.

10. சிரிப்பதற்கு எத்தனை தசைகள் உதவி தேவைப்படுகிறது?
    வெறுப்பதற்கு எத்தனை தசைகள் தேவைப்படுகிறது?

    - 17, 43.

11. வாழ்நாளில் நீர் அருந்தாத பாலூட்டிகள் எது?

    - எலி, கங்காரு.

12. வெட்டுக்கிளியின் இரத்தம் மற்ற உயிரினங்களின் இரத்தத்திலிருந்து
    எவ்வாறு வேறுபட்டுள்ளது.

    - வெண்மை.

13. நுண்ணுயிர்களை அழிக்கும் பென்சிலின் மருந்தை கண்டுபிடித்தவர்
    - அலெக்சாண்டர் ஃப்ளெமிங்.

14. பிளாஸ்டிக்கை முதன்முதலில் கண்டுபிடித்தவர்.
    - லியோ ஹென்றிக் பேகலண்டு.

15. 'கணிப்' பொறியைக் கண்டுபிடித்தவர்
    - சார்லஸ் பேபேஜ்.

16. வானொலிப் பெட்டி கண்டுபிடித்தவர் மற்றும் ஆண்டு.
    - குக்லியேமோ மார்க்கோனி, 1895.

17. இந்தியாவின் முதல் விண்வெளி வீரர் யார்?
    - இராகேஷ் சர்மா.

18. பூமியில் 60 கிலோ எடை இருந்தால் சந்திரனில் எடை எவ்வளவு?
    - 10 கிலோ.

19. மின்சாரத்தைக் கடத்துவதில் மிகுந்த திறன்கொண்ட உலோகம்
    - வெள்ளி.

20. நமது உடலின் எடையில் நீரின் அளவு
    - சுமார் 70% ஆகும்.

££££
££

Mr.J.Charles William, Senior Lecturer had participated in the Workshop" "Environmental Orientation" at the Regional Institute of Education, Mysore during the month of December'95.

DISTRICT INSTITUTE OF EDUCATION AND TRAINING: NAMAKKAL - 637 001.

ESTIMATED ANNUAL PLAN FOR 1995-'96.

REGARDING INSERVICE COURSES.

| Sl. No. | Name of the Course. | No.of of Course. | Dura- -tion (Days). | Intake per Course. | Total No.of partici- -pants. | D.A. per partici- -pant. | Total D.A. | T.A. per partici- -pant. | Total T.A. | Assumed rate per partici- -pant. | Stationery materials Total. | Total Estimated Expenses. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. | 8. | 9. | 10. | 11. | 12. | 13. |
| | | | | | | Rs. | Rs. | Rs. | Rs. | | Rs. | Rs. |
| 1. | Comprehensive Course. | 20 | 10 | 50 | 1000 | 20/- | 200000/- | 40/- | 40000/- | 10 | 10000/- | 250000/- |
| 2. | Short Theme Specific Course. | 20 | 5 | 25 | 500 | 20/- | 50000/- | 40/- | 20000/- | 5 | 2500/- | 72500/- |
| 3. | Course for Heads of Elementary Schools & School Complexes. | 20 | 4 | 25 | 500 | 20/- | 40000/- | 40/- | 20000/- | 4 | 2000/- | 62000/- |
| 4. | Workshop Course | 20 | 3 | 25 | 500 | 20/- | 30000/- | 40/- | 20000/- | 20 | 10000/- | 60000/- |
| 5. | Semigars of Commun- -ity leaders & Youth. | 30 | 2 | 25 | 750 | 20/- | 30000/- | 40/- | 30000/- | 2 | 1500/- | 61500/- |
| | Total | 110 | / | // | 3250/ | // | 350000/- | // | 130000/- | // | 26000/- | 506000/- |

DISTRICT INSTITUTE OF EDUCATION & TRAINING: NAMAKKAL - 637 001.

INSERVICE PROGRAMMES CONDUCTED DURING 1994-'95.

| Sl.No. | Name of the Course. | No.of Courses. | No.of Participants. |
|---|---|---|---|
| 1. | Short Theme Specific Courses (5 days) | 18 | 436 |
| 2. | Workshop course (3 days) | 5 | 152 |
| 3. | Comprehensive course (14 days) | 5 | 241 |
| 4. | Course for Heads of Elementary Schools (4 days) | 19 | 182 |
| 5. | Course for AEO & DIS (2 days) | 2 | 68 |
| | Total | 49 | 1079 |

# உங்களுக்கு தெரியுமா

கி. வெங்கட்ராமன்,
விரிவுரையாளர்,
பிரிவு - 7.

| | | |
|---|---|---|
| 1. | வெள்ளை நகரம் | - பெல்கிரேடு (யுகோஸ்லேவியா) |
| 2. | இந்தியாவில் முதன்முதலில் பேருந்தை ஓட்டிய பெண் ஓட்டுநர். | வசந்தகுமாரி. |
| 3. | தற்போதைய மிக உயர்ந்த கட்டிடம். அதன் உயரம் | பெட்ரோனாஸ் டவர் (கோலாலம்பூர்), 1467 அடி |
| 4. | இந்தியாவின் மிகப்பெரிய தேர்தல் வாக்குச் சீட்டு | கர்நாடகம் மாநிலம் பெல்காம் தொகுதியில் 1985 மார்ச் 5-ல் நடைபெற்ற தேர்தலில் 301 வாக்காளர்களைக் கொண்ட வாக்குச்-சீட்டு பயன்படுத்தப்பட்டது. |
| 5. | உலகிலேயே மிக அதிவேகமாக செல்லக்கூடிய ரயில் | பிரான்சின் டி.ஜி.வி. ரயில் ஒரு மணிக்கு 515 கி.மீ. வேகத்தில் செல்கிறது. |
| 6. | உலகிலேயே உயரமான மனிதன் | முகமது ஆலம் சன்னா உயரம் 231.7 செ.மீ. (அல்லது) 7 அடி 7½ அங்குலம். |
| 7. | நோபல் பரிசு பெற்ற இந்தியர்கள் | : 1. இரவீந்திரநாத் தாகூர்<br>2. சர். சி.வி. இராமன்<br>3. ஹர்கோவிந்த் கொரானா<br>4. அன்னை தெரசா<br>5. சுப்ரமணியம் சந்திரசேகர். |
| 8. | இந்தியாவில் மிக உயரமான நீர்வீழ்ச்சி | கர்நாடகாவில் உள்ள ஜோக் நீர்வீழ்ச்சி 253 மீட்டர் உயரம். |
| 9. | ஒன்றுடன் 33 பூஜ்ஜியங்கள் சேர்ந்தால் அது | டெசில்லியன். |
| 10. | சாதாரண நிலையில் பிறந்த குழந்தைக்கு நாடித்துடிப்பு நிமிடத்திற்கு. | 130 - 140 தடவை. |
| 11. | வெள்ளைத்தங்கம் என்பது | : பிளாட்டினம். |
| 12. | முதன்முதலில் சாந்திநிகேதன் துவக்கப்பட்டபோது அதில் | 5 ஆசிரியர்கள் & 5 மாணவர்கள் மட்டுமே இருந்தனர். |
| 13. | அமெரிக்காவின் பழைய "எக்ஸிகியூடிவ் மேன்ஷன்" என்ற கட்டிடம் தற்போது | : வெள்ளை மாளிகை என அழைக்கப்படுகிறது. |

14. உலகிலேயே மிகவும் பழமையான கப்பல் } [illegible].

15. தூங்கும் போலீஸ் என்பது : சாலையில் போடப்பட்ட ஸ்பீட் பிரேக்கர்ஸ் (அ) வேகத்தடைகளை குறிக்கும்.
(Sleeping Police)

●●●

Mr.V.Ranganathan and Mr.K.Venkatraman, Lecturers had participated in "Southern Region DRU faculty Training" during the månth of November'95 at Karnataka Institute of Agricultural Marketing Hospital, Mysre.